# பொன்னியின் செல்வனில் சேந்தன் அமுதன்

முனைவர் அர.மீனா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
அண்ணா ஆதர்ஷ் மகளிர் கல்லூரி, சென்னை – 600040.
arangameena@gamil.com

10

**புகுமுன்**

காதலையும் வீரத்தையும் இரு கண்களெனப் போற்றியவன் தமிழன். போர்க்களத்திலும் பூத்துக் குலுங்கிய காதல் கதை உண்டு. காதலால் தோற்றவன் போர்க்களத்தில் சென்று மாண்ட கதையும் உண்டு. இத்தகு காதல் அரசியல் குழப்பங்களுக்கு வித்திட்டதும் உண்டு. மக்களை ஆள வேண்டிய மன்னன், கடமை மறந்து தன் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு ஆட்படும்போது, பகைவர்கள் விழித்துக் கொள்கின்றனர். விளைவு அரசியல் சதிகள் தலையெடுக்கின்றன. இத்தகு உண்மையை அடிப்படையாகக் கொண்டு பல வரலாற்று உண்மைகளைச் சில கற்பனை கலந்து பொன்னியின் செல்வனாகப் படைத்தளித்தார் கல்கி. தலைமுறைகள் பல கடந்தும் இன்னும் பேசுபொருளாக நின்று நிலைத்திருக்கின்றமை இதன் தனிச்சிறப்பு. இக்காவியத்தின் தவிர்க்கமுடியாத ஓர் பாத்திரமாக உலா வருகின்ற சேந்தன் அமுதன் குறித்த பார்வையை ஆராய்கின்றது இக்கட்டுரை.

**சோழப் பேரரசு – அறிமுகம்**

பல்லவர்களும் பாண்டியர்களும் தமிழகத்தை ஆண்டபோது அவர்களை வென்று சோழப் பேரரசை நிலை நாட்டியவர் விஜயாலயச் சோழன். இவர் பிற்காலச் சோழப் பேரரசிற்கான வலிமையான அடித்தளத்தை இட்டவர். இவருடைய மகன் ஆதித்த சோழன். தந்தை உருவாக்கிய சோழப் பேரரசைத் தம் படைத்திறமையால் விரிவாக்கியவர்.

ஆதித்த சோழனின் மகன் பராந்தக சோழன். பராந்தக சோழனின் புதல்வர்கள் இராஜாதித்தர், கண்டராதித்தர், அரிஞ்சய சோழர். இவருள் இராஜாதித்தர் பெரும்படை திரட்டிச் சென்ற இடமெல்லாம் வெற்றிக் கொடி நாட்டி, புலிக் கொடி உயர்த்திய மாவீரர். இன்றைய வீர நாராயண ஏரியை உருவாக்கிய பெருமைக்குரியவர். இவருடன் நேருக்கு நேர் நின்று போர் செய்து வெற்றி பெற முடியாது என்பதை உணர்ந்து யானையின் மீதிருந்த இராஜாதித்தர் மேல் விஷம் தோய்ந்த அம்பினை எய்து வஞ்சகமாகக் கொலை செய்தான் கங்க நாட்டு மன்னன் பூதுகனான். இராஜாதித்தருக்குப் பிறகு கண்டராதித்தர் அரியணை அமர வேண்டும். ஆனால் அவர் சிந்தை முழுவதும் சிவ பக்தியில் திளைத்திருந்தமையால் ஆட்சி செய்யும் விருப்பம் தனக்கு இல்லை என்று அறிவித்து, தன் தம்பி அரிஞ்சய சோழருக்கு மணிமுடி தரித்து, அரிஞ்சய சோழனின் மகன் சுந்தரசோழனுக்கு இளவரசு பட்டம் கட்டினார். பிற்காலத்தில் செம்பியன் மாதேவியைத் திருமணம் செய்த பிறகு அவருக்கென்று ஓர் குழந்தை பிறந்த பின்பும் கூட அரசாளும் உரிமையைத் தன் தம்பிக்கும், அவனுடைய வாரிசுகளுக்கும் உரித்தாக்கினார்.

இதன் விளைவாக அரிஞ்சய சோழனுக்குப் பிறகு சுந்தரசோழன் ஆட்சிப் பொறுப்பேற்றார். அவருடைய பிள்ளைகள் ஆதித்த கரிகாலன், குந்தவை, அருண்மொழித்தேவர் ஆவர். முதுமை எய்தி நோய்வாய்ப்பட்ட சுந்தரசோழருக்குப் பிறகு அரியணையில் அமரப் போகின்றவர் அவருடைய மூத்த மகன் ஆதித்த கரிகாலனா? மக்களின் செல்வாக்கைப் பெற்ற அவருடைய இளைய மகன் அருண்மொழிவர்மனா? அன்றி பழுவேட்டரையர்களின் சூழ்ச்சிக்கு இணங்கி, அரசாளும் உரிமையைக் கைப்பற்ற நினைக்கும் கண்டராதித்தர் – செம்பியன் மாதேவியின் வளர்ப்பு மகன் மதுராந்தகனா? என்ற வினாக்களுக்கு விடையளிக்கும் வண்ணமாகப் படைக்கப்பட்டதே பொன்னியின் செல்வன் என்னும் காவியமாகும்.

**மணிமுடி தரித்தவர் யார்?**

சுந்தர சோழனின் மூத்த மகன் ஆதித்த கரிகாலன் பகைவர்களின் சூழ்ச்சியால் கொலை செய்யப்படுகின்றான். இளைய மகன் அருண்மொழித்தேவனுக்கு மணிமுடி அளிக்க முடிவு செய்து பட்டம் சூட்டும் விழா ஏற்பாடு செய்யப்படுகின்றது. ஆனால், தனக்குச் சூட்டப்பட இருந்த மணிமுடியைத் தன் அருகில் நின்ற சேந்தன் அமுதனைச் சுட்டிக் காட்டி சோழப் பேரரசை ஆளும் உரிமை கொண்டவர் இவரே என்று கூறி அவருக்கு மணிமுடி சூட்டுகின்றார் அருண்மொழித் தேவர். இந்த சேந்தன் அமுதன் உண்மையில் யாருடைய மகன்? அரசாளும் உரிமை இவருக்கு ஏன் கிடைக்கப் பெற வேண்டும்? அரசுரிமை ஏற்குமளவு மக்கள் மனதை வென்றவரா என்றதை விளக்க முற்படுகின்றது இக்கட்டுரை.

**சேந்தன் அமுதன் அறிமுகம்**

இந்நாவலில் 22ஆவது அத்தியாயத்தில்தான் சேந்தன் அமுதன் அறிமுகம் செய்யப்படுகின்றார். ஊமைப்பெண் வாணி அம்மையாரின் மகனாகவும், தன் வீட்டிற்கருகில் பூஞ்சோலை அமைத்து, பூஞ்சோலையில் மலரும் மலர்களை இறைவனுக்குக் காணிக்கையாக்குகின்ற திருப்பணியை மேற்கொண்டவராகவும், சிவ பக்தியில் திளைத்தவராகவும் அறிமுகம் செய்யப்படுகின்றார். நாவலின் கதையோட்டத்திற்கு ஆங்காங்கே உயிர் கொடுக்கின்ற முக்கிய கதாபாத்திரமாக அமைகின்ற சேந்தன் அமுதன் உண்மையில் யார் என்பதை நாவலின் இறுதிப் பகுதி வெளிப்படுத்துகின்றது.

**சேந்தன் அமுதனே உத்தம சோழன்**

சிவ பக்தியில் விருப்பம் கொண்டு, அரசாளும் உரிமையைத் தன் தம்பிக்கு விட்டுக் கொடுத்த கண்டராதித்தர் – செம்பியன் மாதேவி தம்பதியரின் உண்மை மகன்தான் சேந்தன் அமுதன். இவரே பிற்காலத்தில் மதுராந்தக உத்தமசோழன் என்று அறியப்படுகின்றார்.

**சேந்தன் அமுதனின் பிறப்பு இரகசியம்**

சிவபக்தியில் திளைத்து உலக வாழ்வை வெறுத்த கண்டராதித்தர், தன்னைப் போலவே சிவபக்தியில் உருகிய மழவரையர் மகள் செம்பியன் மாதேவியைத் திருமணம் செய்து கொள்கின்றார். நீண்ட காலம் கழித்து கருவுறுகின்றாள் செம்பியன் மாதேவி. கண்டராதித்தர் சிவ தரிசனம் சென்றிருந்த வேளையில் செம்பியன் மாதேவிக்கு ஓர் ஆண் குழந்தை பிறக்கின்றது. அக்குழந்தை எந்த ஒரு அசைவும் இல்லாமல் இருப்பதைக் கண்டு துடிக்கின்றாள். அதைக் கண்ட அமைச்சர் அநிருத்தர், "தாங்கள் அழைத்து வந்து வைத்திருக்கும் ஊமைப் பெண்களில் ஒருத்திக்கு ஆண் ஒன்றும், பெண்

ஒன்றுமாக இரட்டைக் குழந்தை பிறந்துள்ளது. அவற்றுள் ஆண் குழந்தையைத் தாங்கள் தங்கள் குழந்தையாக ஏற்று வளர்க்கலாம்" என்று கூற, செம்பியன் மாதேவியும் பிள்ளைப் பாசத்தால் அதற்கு இசைகின்றார். இறந்து பிறந்ததாக எண்ணிய தன் குழந்தையை ஊமைப்பெண் வாணியிடம் தந்து அக்குழந்தையைப் புதைக்குமாறு ஆணையிட்டு, அவளுடைய சகோதரி மந்தாகினிக்குப் பிறந்த ஆண் குழந்தையைத் தன் குழந்தையாக ஏற்கின்றாள். பெண் குழந்தையை ஆழ்வார்க்கடியானிடம் கொடுத்துவிடுகின்றனர். முதலில் குழந்தைகளைத் தர மறுத்த மந்தாகினி பின்பு குழந்தைகளை விட்டு எங்கோ ஓடி விடுகின்றாள்.

வாணி அம்மையார் இறந்த குழந்தையைப் புதைக்கும் வேளையில் கருத்திருமன் அக்குழந்தை உயிருடன் இருக்கின்றது என்று கூற, அதிர்ச்சியடைந்த வாணி அம்மையார் அக்குழந்தையைத் தன் குழந்தையாக ஏற்று, கருத்திருமனுடன் அவ்வூரை விட்டே சென்று விடுகின்றாள். அக்குழந்தையே சேந்தன் அமுதன் ஆவார். அரண்மனையில் அனைத்து சுகபோகங்களையும் பெற்று வாழ வேண்டிய உரிமை பெற்ற சேந்தன் அமுதன், தன் தந்தை தாய் போல இளமையிலேயே சிவ பக்தி கொண்டவராய், மிகுந்த எளிமையுடன், வாணி அம்மையார் தன்னுடைய வளர்ப்புத்தாய் என்பதை அறியாமலேயே வாழ்கின்றார்.

**தன் தாய் செம்பியன் மாதேவி என்பதை அறிதல்**

வந்தியத்தேவனுக்கு உதவி செய்தமைக்காகச் சிறையில் அடைபட்டிருந்தபோது, அங்கே இருந்த கருத்திருமன், "ஊமைத்தாயின் பிள்ளை அரண்மனையில் அரசகுமாரனாக வளர்கிறான் என்றும், இராஜ குலத்துக் குழந்தை ஊமைத்தாயின் வீட்டில் வளர்ந்து வருகிறான் என்றும்" (ப.671) கூறியதைக் கேட்ட சேந்தன் அமுதன் தான், கண்டராதித்தர் - செம்பியன் மாதேவியின் தவப்புதல்வன் என்பதை அறிந்து கொள்கின்றார்.

**பெற்றோர் கருத்தின்வழி நடக்க விரும்புதல்**

தன் தந்தையும் தாயும் சிவபக்தி கொண்டவர்களாக, இறைவனுக்குத் திருப்பணி செய்யும் தொண்டர்களாக இருப்பதைக் கண்டு தானும் அவ்வாறு இருப்பதை எண்ணி மகிழ்கின்றார். தன் தாயும் தந்தையும் அரசாளும் எண்ணம் இல்லாதவர்களாய், தங்கள் மணிமுடியைத் தியாகம் செய்தவர்கள் என்பதை உணர்ந்து தானும் அவ்வாறு இருக்க விரும்பியதை, "தங்கள் மனம் கோணாமல் நடப்பதற்காக என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட பூங்குழலியைத் தியாகம் செய்யவும் சித்தமாயிருந்தேன்" (ப.666) என்று தன் தாய் செம்பியன் மாதேவியிடம் கூறுகின்றார். மேலும், "நாடாளும் ஆசை என் உள்ளத்தில் என்றும் புகலாகாதென்று இறைவனை வேண்டிக் கொண்டேன்" (ப.671) என்று அவர் குறிப்பிடுவதினின்று, பெற்றோர் விருப்பத்தை நிறைவு செய்ய வேண்டும் என்ற அவரது விருப்பமும், அதற்காக எதையும் தியாகம் செய்யும் அவரது துணிவும் வியப்பை அளிக்கின்றது.

**சிவபக்தியில் திளைத்தவர்**

தன் தந்தை கண்டராதித்தரின்வழி இவ்வுலகப் பற்றினின்று நீங்கி, வீடு பேறு அடைகின்ற வழியைத் தருபவன் சிவபெருமான் ஒருவனே என்ற கருத்தினின்று வழுவாதவராக சிறந்தோங்கினார் சேந்தன் அமுதன். இதனை இக்காவியத்தில் பல இடங்களில் காண முடிகின்றது.

- சிறையில் இருந்தபோதும் "பொன்னார் மேனியனே" என்று சிவப் பதிகம் பாடியபடியே இருக்கின்றார். அவரை விடுவிக்க வந்த குந்தவை, சேந்தன் அமுதனிடம், இந்தப் பாட்டை மட்டும் நீ பாடிக்கொண்டிருக்கக் காரணம் என்ன என்று வினவியபோது, "இங்கு வரும்போது தங்கசாலையின் வழியாக வந்தேன். இதுவரை நான் பார்த்திராத பத்தரை மாற்றுப் பசும்பொன் திரளைப் பார்த்தேன். அது பொன்னார் மேனியன் திரு உருவத்தை எனக்கு நினைவூட்டியது" என்று விடையிறுக்கின்றார். (ப.182).
- வேறு ஒரு சூழலில், பூங்குழலியின் ஆவேசத்தைக் கண்டு "நெஞ்சின் தாபத்தைத் தணிப்பதற்கு இறைவனுடைய கருணை வெள்ளத்தைக் காட்டிலும் சிறந்த உபாயம் வேறு இல்லை" (ப.427) என்று கூறுகின்றார்.
- பூங்குழலி அவரிடம் அரசாளும் திறமையை நீங்கள் வளர்த்துக் கொள்ளலாம் என்று கூறும்போதும், "என் மனம் கத்தி எடுத்துப் போர் செய்வதில் ஈடுபடவில்லை. ஒரு சிறு பிராணியை இம்சிக்கவும் நான் விரும்பவில்லை. மணிமகுடமும் சிம்மாதனமும் என் உள்ளத்தைக் கவரவில்லை. சிவபெருமானையும் சிவனடியார்களையும் ஏத்திப் பரவிப் பாடிக்கொண்டு காலங்கழிக்க விரும்புகிறேன்" (ப.639) என்றுரைக்கின்றார்.

இவற்றைக் காணும்போது சிவன்பால் அவர் கொண்ட பகத்தியும் நேர்மையும் புலப்படுகின்றது.

**மணிமுடி தாங்கும் விருப்பமின்மை**

தான் ஒரு அரச குலத்தில் பிறந்தவன் என்று தெரிந்தும், அதற்கென உரிமை கொண்டாடாமல், மிகுந்த அமைதியுடனும், பக்குவப்பட்ட உள்ளத்துடனும், தன் தந்தையைப் போலவே மணிமுடியைத் தியாகம் செய்யும் சீலனாகக் காட்சியளிக்கின்றார். தன் தாயின் உரிமையைத் தவிர வேறு எதுவும் தனக்கு வேண்டாம் என்ற உறுதிபட நிற்கின்றார். இதனை, "தங்களை அன்னை என்று அழைக்கும் உரிமையைத்தான் வேண்டினேன்" (ப.666) என்ற அவர் கூற்றினின்று உணரலாம்.

மேலும், சோழ நாட்டு மக்கள் அருண்மொழிவர்மன் மீது கொண்டிருக்கும் அன்பையும், நம்பிக்கையையும் தான் நன்கு உணர்ந்தவன் என்றும், மணிமுடி அவருக்கே உரித்தாக வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றார். அனைவரும் சேந்தன் அமுதனை மணிமுடி தரிக்க வற்புறுத்தும்போது, "அருள்மொழி வர்மரே திருமுடி சூட வேண்டும் என்பதுதான் ஏகோபித்த மக்களின் வாக்கு. இவ்வளவு பெரிய பிரளய வெள்ளத்தை எதிர்த்து என்னால் நீந்த முடியுமா?" (ப.672) என்று கூறி அவ்வாய்ப்பை மறுக்கின்றார். அதோடு "இருபத்திஇரண்டு ஆண்டு எளிய குடிசையில் காலங்கழித்தவன் திடீரென்று இன்றைக்கு என்னைப் பேரரசர் குலத்தில் பிறந்த இளங்கோவாகக் கருதிக் கொள்ளவும் முடியவில்லை" (ப.671) என்று நாடாளும் விருப்பமின்மையைத் தெரிவிக்கின்றார். இதனால், நாட்டை ஆளுகின்ற உயரிய வாய்ப்பு முறையாகத் தனக்குக் கிடைத்தபோதிலும், அதனை ஏற்காது தான் கொண்ட கொள்கையில் உறுதிபட நிற்கின்ற தூயவனாகத் தோன்றுகின்றார் சேந்தன் அமுதன்.

**வந்தியத்தேவனை தன் நண்பராக ஏற்றவர்**

ஆதித்த சோழனுடைய ஆணைக்கு இணங்கி, தஞ்சையில் உள்ள சுந்தரசோழனைச் சந்திக்க வருகின்ற வந்தியத்தேவனை சேந்தன் அமுதனுக்கு ஏனோ பார்த்தவுடன் பிடித்துவிடுகின்றது. அவர்பால் அன்பு கொண்டு, தன் உயிரையும் பணயம் வைத்து வந்தியத்தேவனுக்கு உதவிகள் பல

புரிகின்றார். அதனால் சிறை செல்ல வேண்டிய சூழல் சேந்தன் அமுதனுக்கு ஏற்படுகின்றது. யாரோ முன்பின் தெரியாத ஒரு வழிப்போக்கனை நம்பி நீ எதற்காக அவ்வளவு தூரம் உதவி செய்தாய்? என்று வானதி கேட்க, “தாயே சிலரைப் பார்த்தால் உடனே நமக்குப் பிடித்துப் போகின்றது. அவர்களுக்காக உயிரையும் கொடுக்கலாம் என்று தோன்றுகின்றது. காரணம் என்னவென்று சொல்வது” (ப.182) என்று கூறுவதினின்று உண்மைத் தோழனாக வந்தியத்தேவனை ஏற்றுக் கொண்ட நிலை புலப்படுகின்றது. அதோடு அவனுடைய வீர தீரங்களைக் கண்டு வியந்து “அவனுடைய சமார்த்தியங்களில் பத்தில் ஒரு பங்கு தனக்கு இருக்கக் கூடாதா? அல்லது அந்த வந்தியத்தேவனே இந்தச் சமயம் இங்கு வரக்கூடாதா” ப.429) என்று எண்ணுமளவு வந்தியத் தேவனைக் கொண்டாடினார். வாளெறிந்து தன்னைக் கொல்ல வந்த தீயவர்களிடம் இருந்து வந்தியத்தேவன் தன்னைக் காப்பாற்றியதைக் கேள்வியுற்று அவன்மேல் அவருக்கு அன்பு பன்மடங்கு பெருகியது.

**பூங்குழலி மீதான காதல்**

சிப பக்தியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாலும், தன் அத்தை மகள் பூங்குழலியின் மீது தணியாத காதல் கொண்டவராய்க் காணப்படுகின்றார். “இறைவன் என் முன்னால் தோன்றி, நீ சுந்தரமூர்த்தியைப் போல் இந்த உடம்போடு கைலாஸத்துக்கு வருகிறாயா? அல்லது பூலோகத்திலிருந்து பூங்குழலியுடன் வாழ்கிறாயா? என்று கேட்டால் பூங்குழலியுடன் வாழ்கிறேன் என்றுதான் சொல்வேன்” (ப.80) என்று கூறுவதினின்று, பூங்குழலி மீதான அவருடைய காதல் வெளிப்படுகின்றது. ஒரு சமயம் பூங்குழலியிடமே தன் காதலைத் தெரிவித்து, “மேலான அமைதியுள்ள வாழ்க்கையைத் தருவேன். கேள். பூங்குழலி தஞ்சை நகர்ப்புறத்தில் அழகான பூந்தோட்டத்தின் மத்தியில் என் குடிசை இருக்கிறது. அதில் அன்னையும் நானும்தான் வசிக்கிறோம். நீ அங்கு வந்து விட்டாயானால் உன் வாழ்க்கையே மாறுதல் அடைந்துவிடும்.” (ப.422) என்றும், “மாலை ஆனதும் நான் உனக்கு அமுதினும் இனிய தெய்வத் தமிழ்ப் பதிகங்களைச் சொல்லிக் கொடுப்பேன். உன்னுடைய மதுரமான குரலில் அவற்றைப் பாடினால் பாடிய உன் நாவும் இனிக்கும். கேட்கும் என் காதும் இனிக்கும்” என்று தன் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்துகின்றார். ஆனால் பூங்குழலி அரச வாழ்க்கை வோழ வேண்டுமென்று பிடிவாதம் பிடிக்க, அவளுடைய சம்மதம் இன்றி அவளை நெருங்கக் கூடாது என்பதில் கவனமாக இருப்பதைக் காணும்போது கண்ணியமிக்க ஓர் ஆண்மகனாகத் தோன்றுகின்றார் சேந்தன் அமுதன். இறுதியில் அவருடைய தூய்மையான காதலைப் புரிந்து கொண்டு சேந்தன் அமுதனை மணக்க விருப்பம் தெரிவிக்கின்றாள். அவளுடைய விருப்பத்தைக் கேட்டவுடன் பரவசமடைந்து மகிழ்கின்றார். இருவரும் கோடியக்கரைக்குச் சென்று வாழ்வதென்று தீர்மானிக்கின்றனர்.

**இராஜ குலத்திற்கே உரிய நற்பண்பு கொண்டிருந்தல்**

- முன்பின் தெரியாத வந்தியத்தேவன்பால் அன்பு கொண்டு, அவன் முயற்சிக்குப் பல வழிகளில் துணை நின்றமை.
- கயவர்களால் முதுகில் குத்தப்பட்டு இரத்த வெள்ளத்தில் இருந்த கந்தன் மாறனுக்குத் தன் தாயின் உதவியோடு சிகிச்சையளித்து காப்பாற்றியமை.

- தனக்குத் துன்பம் விளைவித்தபோதிலும், ரவிதாசன் புதை குழியில் இருந்த தப்பிக்க உதவியமை.
- நடுங்கும் சுரத்துடன் துன்பப்பட்டுக் கொண்டிருந்த இளவரசர் அருண்மொழித்தேவரை, குந்தவையின் கட்டளையின் படி புத்த விஹாரத்தில் சேர்த்துக் காப்பாற்றியமை.
- பூங்குழலியின் விருப்பப்படி வாள் சுழற்றக் கற்றுக் கொண்டமை.

என அவருடைய நற்பண்புகளை உற்று நோக்கின் இயல்பாகவே அரசருக்குரிய தகுதியும், உயிர்களின்பால் அவர் கொண்டிருக்கின்ற கருணையும் புலப்படுகின்றது.

**மணிமுடி தரித்தல்**

நாடாள தனக்கு விருப்பமில்லை என்று சேந்தன் அமுதன் தெரிவித்த பிறகும்கூட, நியாய தர்மங்களை அலசிப் பார்த்த அருண்மொழி வர்மன், "என்னை விட இந்தக் கீரிடத்தை அணியத் தகுந்தவர் இங்கே ஒருவர் இருக்கிறார். அவர் என்னைவிட பிராயத்தில் மூத்தவர். இந்தச் சோழ ராஜ்யத்துக்கு என்னைவிட அதிக உரிமை அவருக்கு நியாயமாக இருந்த போதிலும் அவர் அதைக் கோரவில்லை…ஆகையால் இந்த மணிமகுடத்தை மகான் கண்டராதித்தரின் குமாரரும், என் சிறிய தந்தையுமான மதுராந்தகத் தேவரின் தலையில் சூட்டுகிறேன்" (ப.708) என்று கூறி மணிமகுடத்தை சேந்தன் அமுதன் தலையில் சூட்டுகின்றார். சுற்றியிருந்த சான்றோர்கள் அனைவரும், "கோப்பரகேசரி மதுராந்தக உத்தம கோழர் வாழ்க" என்று முழங்கினர். இவற்றையெல்லாம் கண்டு திகைப்பு நீங்காத சேந்தன் அமுதன், தன் தாய் செம்பியன் மாதேவியை வணங்கி நிற்கின்றார். இந்தச் சேந்தன் அமுதனே உத்தமச் சோழனாக 16 ஆண்டுகள் சோழ நாட்டை ஆட்சி செய்து புகழ் பெற்றார் என்று கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

**முடிவுரை**

பொன்னியின் செல்வன் என்றும் காவியம் சோழ நாட்டில் விளைந்த சதியை மட்டும் குறிப்பிடவில்லை. மாறாக, சோழ குலத்தின் பெருமையையும், அக்குலத்தில் பிறந்தோரின் வண்மையையும், மண்ணாசை, பெண்ணாசையால் தன் நிலை திரிந்து போயிடினும், நாட்டு மக்களின் நலன் காக்கும் வீரம் நிறைந்தவர்கள் என்பதையும் பறை சாற்றும் வரலாற்று ஆவணமாகத் திகழ்கின்றது. இனிய தமிழில், சொற்சுவையுடனும், ஆங்காங்கே வரலாறு உரைத்தும் ஒப்பற்ற காவியத்தை உலகிற்குத் தந்து அழியாப் புகழ் பெற்ற கல்கி அவர்களின் முயற்சியைக் காலங்கள் பல கடந்தும் பாராட்டுகின்றோம் எனில் அது அவருடைய தமிழ்ப்பற்றுக்கு மைல் கல்லாக விளங்குகின்றது.

**துணைநின்ற முதன்மை நூல்**

அமரர் கல்கியின பொன்னியின் செல்வன்
(ஐந்து பாகங்களும் அடங்கியது)
நக்கீரன் பப்ளிகேஷன்ஸ், இராயப்பேட்டை, சென்னை – 600014.
இரண்டாம் பதிப்பு 2011.